R4900

# GOD'S PROVIDENCE RE TWO QUEENS

# இரண்டு ராணிகளுக்கான தேவனுடைய அருள்

எஸ்தர் 4:1-5; 3

"கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றுகிறார்." சங்கீதம் 145:20

இன்றைய பாடம் ராணி எஸ்தரைப் பற்றியது. அவள் ஒரு அழகான யூத பெண். அவளது அழகினிமித்தமாக, பெர்சியா ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு ராணியானாள். அவளது அழகினிமித்தமாக, நட்சத்திரம் என்று பொருள் கொள்ளக்கூடிய எஸ்தர் என்ற பெயரை பெற்றாள் என்று அனுமானிக்கப்பட்டது. இஸ்டார் என்பது வெள்ளி (Venus) கிரகத்தை குறிக்கும் கல்தேய வார்த்தை. ராஜாவினால் நீக்கப்பட்டு, விவாகரத்து பண்ணப்பட்ட வஸ்தி என்பவளுக்கு பிறகு எஸ்தர் ராணியானாள்.

இந்த இரண்டு ராணிகளின் எதிரான வழியில் நமக்கு இன்றைய நாளின் பெண்ணுரிமைப் பற்றிய ஒரு பாடத்தை நாம் கேட்கிறோம். ராஜா தனது ராஜ்யத்தின் பிரதானிகளுக்கு ஒரு விருந்து வைத்தான். அது ஒரு களியாட்டமாக இருந்தது என்று எடுத்துக்கொள்ளலாம். இந்த விருந்தின் உச்சக்கட்டத்தில் ராஜாவும் அவனது விருந்தினர்களும் மதுவின் செல்வாக்கின் கீழ் இருந்தனர். ராஜாவின் வேண்டுகோளை ராணி வஸ்தி அசட்டை பண்ணினதற்கு இது கூட காரணமாக இருக்கலாம். சந்தேகத்தின் பலனை ராணி வஸ்திக்கு கொடுக்கிறோம்.

அவள் தன் பெண்மையின் நீதியான உரிமையை உறுதிப்படுத்த, அவளது உரிமைகளுக்காக நின்றாள் என்று அநேகர் சொல்லுவார்கள். அனைத்து பெண்களுக்கும் உரிமைகள் இருக்கின்றன. ராணி வஸ்தியும் அவளது உரிமைகளை பெற்றிருந்தாள். அவற்றை அவள் கையாண்டாள் என்பதில் நாம் விவாதம் செய்யவில்லை. உரிமைகள் என்பதில் கட்டாயப்படுத்துதல், பலவந்தப்படுத்துதல் என்ற திசையில் ராணி வஸ்தி வெற்றி கொண்டாள். ஆனால் அது அவளது அன்பானவனை இழக்கச் செய்தது.

இந்த பாடத்தில் பொருளாயிருக்கிற ராணி எஸ்தரின் செயல்முறையில் எதிரான மார்க்கம் பின்பற்றப்பட்டது என்பதை நாம் பார்க்கிறோம். முற்றிலும் எதிர்மாறான செயல்முறையால் ராணி சந்தோஷமான பலனை மாபெரும் வெற்றியை பெற்றாள். ஞானமுள்ள ஆண்களும் பெண்களும் எடுக்க வேண்டிய செயல்முறை என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

வஸ்தி இதைப் போல ஒரு மார்க்கத்தை தெரிந்தெடுத்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை. எனினும் ராஜா அவளை அங்கே வரச்சொன்னது அவளை கேலிப் பேச்சிற்கும் முரட்டுத்தனத்துக்கும் வெளிப்படுத்தியிருக்கும். அவள் தனது ஆற்றல், சாமார்த்தியம் மற்றும் பரிசுத்தத்தின் மேலும் மற்றும் அவளது கணவனின் அன்பு மற்றும் அக்கறையின்மேலும் நம்பிக்கை வைத்திருக்கலாம். அவள் அழைக்கப்பட்டிருக்கும் போது அவளது பிரசன்னம் இடையில் புகுதலாக இல்லாமல் புனிதமானதாக, நறுமணத்தைலமாக இருந்திருக்கும். அகந்தையை கண்டிப்பதாக இருந்திருக்காது. மற்ற அநேக நல்லெண்ணம் கொண்ட பெண்களை போல ராணி வஸ்தியும் ஞானமற்றவளாக இருந்தாள். அவள் கட்டளை பெற்று மறுத்த போது பரிசுத்தமான பெண்மையின் சக்திவாய்ந்த பாதுகாப்பை கைவிட்டாள். வஸ்தி ஒரு கிறிஸ்தவ பெண்ணோ, யூத பெண்ணோ அல்ல. ஆகையால் அவள் தெய்வீக அறிவுறுத்தலையோ அல்லது வழிகாட்டுதலையோ பெறவில்லை.

### எஸ்தர் வெற்றிக்காக குனிந்தாள்

ராணி எஸ்தர் உரிமை பெற்றவள் அல்ல. அவள் ராணி ஆகும்படி அழைக்கப்பட்ட போது அவள் மறுக்காமல் வஸ்தியின் நிலையிலேயே நிற்கும்படி பார்த்தாள். அவள் உரிமை பெறுதலை தெய்வீக கிருபையாக ஏற்றுக்கொண்டாள். அவள் எளிமையாக நல்ல சிறப்பான ஆடை அணிந்து கொண்டாள். முடிந்தவரை ராஜாவுக்கு ஏற்புடையவளாயிருக்கும்படி அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அந்த சமயத்தில் அவள் பதினைந்து வயதுடையவளாக இருந்தாள் என்று யூகிக்கப்படுகிறது. ராஜாவுக்கு பிரியமான ஆமான், அரண்மனை வாசலைக் காக்கிற மொர்தெகாய் என்ற யூதனை வெறுத்தான். ஏனெனில் மொர்தெகாய் மற்றவர்களைப் போல ஆமானை வணங்கி நமஸ்கரிப்பது இல்லை. மொர்தெகாய் மிகவும் விசுவாசமுள்ளவனாய் இருந்ததால் அவன் மேல் குற்றம் கண்டுபிடித்து ஆமானால் அவனை வேலையிலிருந்து நீக்கம் செய்ய முடியவில்லை. அவனது வெறுப்பு யூத இனம் முழுவதின் மேல் சென்றது. ராஜ்யத்தில் இருக்கிற யூதர்களை எதிரிகளாக பாவித்து அவர்களை கொல்லும்படி ராஜாவிடம் ஆமான் கட்டளை பெற்றுக்கொண்டான். இதில் அவன் கொல்ல விரும்பியது அவனது விசேஷித்த எதிரியாகிய மொர்தெகாயும் நிச்சயமாக உள்ளடங்குவான்.

அந்த ராஜா கட்டளையை நிறைவேற்ற நாள் நெருங்க நெருங்க மொர்தெகாயும் ராஜ்யம் முழுவதும் இருந்த அனைத்து யூதர்களும் துன்பத்திலும் பயத்திலும் இருந்தார்கள். எனினும் அவர்களது தேவன் அவர்களை விடுவிப்பார் என்கிற நம்பிக்கை இல்லாமலில்லை. இந்த காரியம் நமது பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ராணி எஸ்தர் மொர்தெகாய்க்கு ஒன்றுவிட்ட தங்கை. ஆனால் அவளது அப்பாவின் வயதுடையவனாயிருந்தான். உண்மையிலேயே அவள் அவனது வளர்ப்பு மகள். மொர்தெகாய் அவளிடம் அவளது செல்வாக்கை பயன்படுத்தி ராஜாவின் கட்டளையை ரத்து செய்யும்படி கேட்டுக்கொள்ளச் சொன்னான். அந்த காலக்கட்டத்தில் அவள் ஒரு மாத காலம் ராஜாவினால் அழைக்கப்படாதிருந்தாள். ஆதலால் அவள் கால தாமதம் செய்தாள்.

## அன்பும் அழகும் வெற்றி பெற்றது

மொர்தெகாய், காரியம் அவசரம் என்று ராணி எஸ்தருக்கு சொல்லி அனுப்பினான். அவள் தனது ஜனங்களுக்கு ஊழியம் செய்யும் சலுகையை இழக்க இருக்கிறாள் என்றும் தேவன் அவளை இந்த அளவுக்கு உயர்த்தியதற்கு காரணம் இந்த நேரத்தில அவளது யூத ஜனங்களுக்கு உதவி செய்யவே என்றும், இந்த சலுகையை அவள் பயன்படுத்த தவறினால் தேவன் தம்முடைய வாக்குத்தத்தின்படி யூதர்களுக்கு இரட்சிப்பு வேறொரு இடத்திலிருந்து வரும் என்றும் சொல்லி அனுப்பினான். இந்த முறையீடு போதுமானதாக இருந்தது. ராணி இன்னும் மூன்று நாட்கள் தாமதித்து, மொர்தெகாயையும் பட்டணத்தில் இருந்த மற்ற யூதர்களையும் அவளுடன் சேர்ந்து தேவனுக்கு முன்பாக உபவாசம் இருக்கச் சொல்ல கேட்டுக்கெண்டாள். இது தேவன் தம்முடைய ஜனங்களை விடுவிப்பதற்கான மன்றாட்டாகவும் எஸ்தர் தனது முயற்சியில் அவளது திறமையையும் சந்தர்ப்பத்தையும் ஞானமாக பயன்படுத்துவதற்காகவும் இருந்தது.

ராணி எஸ்தர் தனது உயிரை பணயம் வைத்து, ராஜாவிடம் இருந்து அழைப்பு இல்லாமல் ராஜ வஸ்திரத்துடன் அவனிடம் பிரவேசித்தாள். அவள் ராஜாவை வசீகரித்தாள். ராஜா தனது பொற் செங்கோலை நீட்டினான். அவள் அதைத் தொட்டாள். அவளிடம் ஒரு வேண்டுகோள் இருப்பதை அவன் உணர்ந்து அவளை பேசும்படி வலியுறுத்தினான். அவள் ராஜாவையும் அவனது பிரதான மந்திரியும் அவளது எதிரியுமாகிய ஆமானையும் அவள் ஏற்பாடு செய்யப்போகிற விருந்திற்கு வரச்சொல்லி கேட்டுக்கொண்டாள். அவள் விருந்திற்கு வந்தவுடன் அவளை சந்தோஷப்படுத்த அவன் அவளுக்காக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அவள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அவன் அவளை நேசிப்பது உண்மையானால் தன்னையும் தன் ஜனங்களாகிய யூதர்களையும் கொல்வதற்கு கட்டளை கொடுப்பீரா என்று பதிலளித்தாள்.

அவளது வழக்கு வென்றது. ஆமான் அநீதியான ஒரு கட்டளையை அனுப்பச் சொன்னான் என்பதை ராஜா உணர்ந்தான். பெர்சியா ராஜா ஒரு கட்டளையை பிறப்பித்தால் அதை மாற்றக்கூடாது என்ற தவறான வரைமுறை இருந்தது. ராஜா இன்னொரு கட்டளையை பிறப்பித்து, ஆமான் மேல் கோபங்கொண்டு அவனை மரத்தில் தூக்கிப்போடவும், யூதர்கள் தங்கள் ஜீவனை காத்துக்கொள்ள, தங்களது எதிரிகளை கொல்லவும் அவர்களது உடைமைகளை கொள்ளையிடவும் யூதருக்கு கட்டளையிட்டதாக சகல தேசங்களுக்கும் எழுதி அனுப்பினான்.